


# சாதகம்

சாஸ்திரம் என்ற பெயரால்

பிறக்கும் போதே

பதின்ரெண்டு சதுரங்களுக்குள்

கிரகங்களைச் சிறைவைத்து

சாதகம் போட்டு

பிழைகிறார்கள் சிலர்

செவ்வாய் இருக்கும் வீடு தோஷம்,

அதனால் மணம் தாமதம்

சுக்கிர திசை,, குரு சந்திர யோகம்

அதை நம்பி ஏமார்ந்து,

கிடைத்த சந்தர்பங்களை

நழுவவிட்டவர்கள் சிலர்

கல்விக்குச் புதன்

தொழிலுக்குச் சூரியன்

திருமணத்திற்கு சாதகம்

குடும்ப விருத்திக்குச் சாதகம்

நோய்வந்தால் சாதகம்

பின்னர் மரணத்துக்குச் சாதகம்

மனித வாழக்கையை

சதுரத்துக்குள் அடங்கிய கிரகங்கள்

ஆட்டிப்படைக்கிறதென்றால்

ஒரு நாட்டின் தலைவிதியை

நிர்ணயிக்கும் தேர்தல் திகதியுமா

சிறைக்குள் இருக்கும் கிரகங்களின்

சொல்லுக்கு ஆடவேண்டும்?